# பாடறிந்து ஒழுகுதல்

1.எட்டுத்தொகை நூல்கள் யாவை?

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

2.கலித்தொகை குறிப்பு வரைக.

கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது கலிப்பா என்னும் பாவகையால் ஆன நூல். நூற்று ஐம்பது பாடல்களைக் கொண்டது.குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி,மருதக்கலி, நெய்தற்கலி,பாலைக்கலி என்னும் ஐந்து பிரிவுகளைக் கொண்டது. கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். நெய்தற்கலிப் பாடல்களை இயற்றியவரும் இவரே.

3. நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.

- இல்வாழ்வு என்பது வறியவர்களுக்கு உதவி செய்தல்.
- பாதுகாத்தல் என்பது அன்புடையோரைப் பிரியாது வாழ்தல்.
- பண்பு எனப்படுவது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல்.
- அன்பு எனப்படுவது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்தல்.
- அறிவு எனப்படுவது அறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்தல்.

- செறிவு எனப்படுவது முன் சொன்ன வாக்கை மறுக்காமல் காப்பாற்றுதல்.
- நிறை எனப்படுவது மறைபொருளைப் பிறர் அறியாமல் காத்தல்.
- நீதிமுறை எனப்படுவது குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல்.
- பொறுமை எனப்படுவது தம்மை இகழ்வாரையும் பொறுத்தல்.

நாம் ஒவ்வொருவரும் இத்தகைய பண்பு நலன்களைப் பின்பற்றி வாழ வேண்டும்.